பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

05 08 2026 WEDNESDAY 6.45 AM

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாடு முழுவதும் அரசு ஊழியர்களுக்கு சேவைகளை வழங்குவதற்கான செயல்திறனை மேம்படுத்துவதில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. தவெக அரசின் முதலாவது நிதிநிலை அறிக்கை தமிழக சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்யப்படுகிறது.

3. பெண்களை அவதூறாக பேசும் எண்ணம் தமக்கு இல்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தின் சட்டப்பூர்வ உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், மாநிலங்களுக்கு இடையேயான நீர் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று கர்நாடக முதலமைச்சரை, பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

5. தமிழ்நாடு பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் திருப்பூர் அணிக்கு எதிரான ஆட்டத்தில் திண்டுக்கல் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>

நாடு முழுவதும் அரசு ஊழியர்களுக்கு சேவைகளை வழங்குவதற்கான செயல்திறனை மேம்படுத்துவதில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மத்திய பணியாளர் நலத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று மத்திய நிர்வாக தீர்ப்பாயத்தின் தலைவர் திரு ரஞ்சித் வசந்த்ராவ் உடனான சந்திப்பின்போது இதனை அவர் கூறினார்.

நிர்வாகத்தில் நீதி என்பது நல்லாட்சியின் ஒரு முக்கிய அங்கம் என்றும், அரசு ஊழியர்களுக்கான சேவைகளை எளிமையுடன் மேம்படுத்தும் வகையில் சீர்திருத்தங்கள் இருக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

அதுபோன்ற சீர்திருத்தங்களை மத்திய அரசு தொடர்ந்து முன்னெடுத்து வருவதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

இந்த சந்திப்பின்போது தீர்ப்பாயத்தின் அண்மைகால முன்னெடுப்புகள் குறித்து அமைச்சரிடம், திரு ரஞ்சித் வசந்த்ராவ் விளக்கம் அளித்தார்.

<<<<<>>>>>>

முதலமைச்சர் திரு விஜய் தலைமையிலான தவெக அரசின் முதலாவது நிதிநிலை அறிக்கை தமிழக சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்யப்படுகிறது.

சட்டப்பேரவைத் தேர்தல் முடிவடைந்து கடந்த மே மாதம் புதிய அரசு அமைந்த பின்னர், 2026-27-ஆம் ஆண்டுக்கான முழுமையான நிதிநிலை அறிக்கையை மாநில நிதியமைச்சர் திரு மரியவில்சன் இன்று காலை பத்து மணிக்கு தாக்கல் செய்கிறார்.

நாளை வேளாண் துறைக்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட உள்ளது.

இந்த கூட்டத்தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து சட்டப்பேரவைத் தலைவர் திரு J C D பிரபாகர் தலைமையில் இன்று நடைபெறும் அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.

இதனிடையே, தவெக சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் அக்கட்சியின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான திரு ஆனந்த் தலைமையில் சென்னையில் நேற்று நடைபெற்றது.

<<<<<>>>>>>

பெண்கள் குறித்து அவதூறாக பேசிய வழக்கில் நேற்று கைது செய்யப்பட்ட சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு உதயநிதி ஸ்டாலின், தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டி காவல்நிலையத்தில் விசாரணைக்கு பின்னர் விடுவிக்கப்பட்டார்.

இதனையடுத்து, சென்னை திரும்பும் முன்னர் திருச்சி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தாம் ஏதும் தவறாக பேசவில்லை என்றும், பெண்களை அவதூறாக பேசும் எண்ணம் தமக்கு இல்லை என்றும் கூறினார்.

விவசாயிகளுக்கு ஆதரவாக மட்டுமே தாம் பேசியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பின்னர் விமானம் மூலம் சென்னை வந்தடைந்தார்.

<<<<<>>>>>>

தமிழகத்தில் அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் குடும்ப அட்டையில் உள்ள உறுப்பினர்களின் விரல் ரேகை சரிபார்ப்புக்காக வரும் 8 மற்றும் 9-ஆம் தேதிகளில் சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது.

தேசிய உணவு பாதுகாப்பு சட்டத்தின்படி முன்னுரிமை மற்றும் அந்தியோதயா அன்ன யோஜனா குடும்ப அட்டைகளின் ஆதார் விவரங்கள் சரிபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் இதுவரை 95 புள்ளி எட்டு ஆறு சதவீத குடும்ப அட்டைகளில் இந்த பணி மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும், இதனை 100 சதவீதம் நிறைவு செய்யும் நோக்கிலும், வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் சிறப்பு முகாம் நடைபெறும் என்றும் குடும்ப அட்டைதாரர்கள் இதனை பயன்படுத்திக் கொள்ளுமாறும் அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<>>>>>>

தமிழகத்தின் சட்டப்பூர்வ உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், மாநிலங்களுக்கு இடையேயான நீர் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று கர்நாடக முதலமைச்சரை, பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, கர்நாடக முதலமைச்சர் திரு D K சிவகுமாருக்கு தாம் கடிதம் எழுதியிருப்பதாக சமூக வலைதளத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மண்டல அளவிலான நீர் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு ஆக்கப்பூர்வமான மாற்று வழிகளையும் தமது கடிதத்தில் விளக்கமாக எடுத்துரைத்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

காவிரி பிரச்சினையில் தமிழக விவசாயிகளின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் நிரந்தரமான மற்றும் சுமூக தீர்வை கர்நாடக முதலமைச்சர் மேற்கொள்வார் என்று தாம் நம்புவதாகவும் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் நடைபெற்ற சாரல் திருவிழா நேற்றுடன் நிறைவடைந்தது.

இதையொட்டி, பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte – செந்தில் – 50 Sec. )*

<<<<<>>>>>>

தூத்துக்குடி தனியார் மின்சார கார்கள் உற்பத்தி நிறுவனத்தில் தயாரான 100 கார்கள் ஹரியானாவுக்கு ரயில் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

இதனால், மதுரை ரயில்வே கோட்டத்துக்கு 22 லட்சம் ரூபாய் சரக்கு வருவாய் கிடைத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte – லஷ்மணன் – 51 Sec.)*

<<<<<>>>>>>

*இருவரிச் செய்திகள்*

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த இரண்டு நாட்களாக பெய்த கனமழை காரணமாக ஏழு பேர் உயிரிழந்துள்ளனர்.

-----------------

ஏமன் கடல் பகுதியில் இந்திய கொடியுடன் வந்த சரக்கு கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

------------

உலக அளவில் எரிசக்தி தட்டுப்பாடு ஏற்பட்ட போதிலும், இந்தியாவில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு ஏற்படவில்லை என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார்.

-----------------

ரிசர்வ் வங்கியின் நிதிக்கொள்கை குறித்த அறிக்கையை அதன் தலைவர் திரு சஞ்சய் மல்கோத்ரா இன்று வெளியிடுகிறார்.

---------------------

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியப்பகுதிகளில் 61 லட்சம் ரூபாய் செலவில் நடைபெற்றுவரும் வளர்ச்சிப்பணிகள் குறித்து ஆட்சியர் திரு ரவிகுமார் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

------------

மின்சார பேருந்துகள் தயாரிப்பு நிறுவனங்களுடன் மாநில போக்குவரத்துத் துறை செயலாளர் திரு நிர்மல் ராஜ் நேற்று சென்னையில் ஆலோசனை நடத்தினார்.

--------------

சென்னை மாநகராட்சியில் மாணவர்களின் இடைநிற்றலை தடுப்பது தொடர்பாக, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் மாநகராட்சி ஆணையர் டாக்டர் சமீரன் ஆலோசனை மேற்கொண்டார்.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தமிழ்நாடு பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் திருப்பூர் அணிக்கு எதிரான ஆட்டத்தில் திண்டுக்கல் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

திண்டுக்கல்லில் நேற்று தொடங்கிய இப்போட்டியில் முதலில் விளையாடிய திருப்பூர் அணி 15 புள்ளி நான்கு ஓவரில், 107 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

108 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய திண்டுக்கல் அணி 18 புள்ளி மூன்று ஓவரில், 3 விக்கெட் இழப்பிற்கு 111 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

இன்று இரண்டு போட்டிகள் நடைபெறவுள்ளன.

திண்டுக்கல்லில் பிற்பகல் மூன்றரை மணிக்கு தொடங்கும் முதல் ஆட்டத்தில் மதுரை அணி – திருச்சி அணியை எதிர்கொள்கிறது.

இரவு மணி 7.30-க்கு தொடங்கும் மற்றொரு ஆட்டத்தில் சென்னை அணி – நெல்லை அணியை எதிர்கொள்கிறது.

-------

இலங்கைக்கு எதிரான இரண்டு டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்பதற்காக இந்திய அணி கொழும்பு சென்றடைந்துள்ளது.

<<<<<END>>>>>>